ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)
19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தமிழன்பன் கவிதைகளில் பெண்ணியப் பார்வை

**இரா. சௌந்தர்யா**
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)

**முனைவர் ச. கொடியரசு**
உதவிப்பேராசிரியர், நெறியாளர்
தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலை நகர், 608 002.

## முன்னுரை

இருபதாம் நுற்றாண்டில் எழுந்த இலக்கியங்களில் பெண்ணியம் குறித்து சிந்தனைகள் மேலோங்கி நின்றன. சமூக நோக்குடைய படைப்பாளர்கள் பலரும் கவிதைகள் எழுதிப் பெண்ணியச் சிந்தனைகளை சமுதாயத்தின் முன்வைத்தனர். அவ்வாறு சமூக அக்கரையோடு கவிதைகள் எழுதிப் புகழ்பெற்று வருபவர் கவிஞர் தமிழன்பன் ஆவார் அவரது கவிதைகளில் காணபெறும் பெண்ணிய நோக்குநிலை குறித்து இவ்வியலில் ஆராயப்படுகிறது.

## இலக்கியமும் சமுதாயமும்

'இலக்கியம் ஓர் சமுதாய நிறுவனம்"[1] என்பர். சமூதாயத்தின் ஓர் அங்கமாகத் தன்னை கருதிக்கொண்டு படைப்பாளன் படைக்கும் படைப்புக்களே சமுதாய இலக்கியங்கள் ஆகும். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் சமுதாயம் எவ்வாறு இருந்தது என்பதை அறிய இலக்கியம்,படைப்பாளர் படைத்த நூல்கள் பெருந்துணை புரிகின்றன.

'ஒரு சமுதாயம் வாழ்ந்த வாழ்வினைக் காணவும் மேற்கொண்ட இலட்சியத்தை அறியவும் பழகிவந்த பண்பாட்டையும் நாகரிகத்தையும் அவர்களிடையே நெடுங்காலமாக வளர்ந்துள்ள இலக்கியமும் கலைகளும் பெரிதும் துணையாவாம்"[2] என்று க.த.திருநாவுக்கரசு குறிப்பிடுகின்றார்

மனித இனத்தின்; தோற்றத்திற்கும் அதன் பல்வேறு செயல்பாடுகளுக்கு பெண்கள் அடிப்படைக் காரணங்களாக அமைக்கப்படுகின்றன. பிறப்பு முதல் இறப்பு வரை அவர்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது ஆண்களின் வாழ்வில் ஒரு பகுதியாக அமையும் பெண்களை பற்றிப் பண்டைக் காலந்தொட்டு இன்று வரை புலவர்கள் பலரும் பெருமைபடக் கூறியுள்ளனர் ஒவ்வொரு சிந்தனையாளரும் தத்தம் சிந்தனைக்கேற்பவும் தாம் கொண்ட கொள்கைக்கேற்பவும் தங்கள் படைப்புளில் பெண்களைப் பற்றி பதிவு செய்துள்ளனர்.

பெண்களைப் பற்றி பாடாத கவிஞர்கள் இல்லை. மரபுவழியான இலக்கியங்களால் பெண்களின் அங்க வருணனைகளே இடம்பெற்றன ஆனால் தற்போது இந்நிலை மாறி,

பெண்களின் மனஉணர்வுகளுக்கு முதலிடம் கொடுத்துக் கவிதைகள் படைக்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில் கவிஞர் தமிழன்பன் கவிதைகளில் பெண்களைப் பற்றிக் கூறியுள்ள கருத்துக்களை எடுத்துரைக்கப்படுகிறது.

## பெண்ணியம்

பெண்ணியம் என்பது பெண்ணின் தன்மை எனப்பொருள் படும் தமிழ்ச்சொல்லாகும். பண்டைய நூல்களில் இச்சொல் ஆட்சி பெறவில்லை. தேசியம், காந்தியம் என்ற சொற்களைப் போன்று பெண்மையின் தன்மைகளைக்குறிக்க இச்சொல் புதுவழக்குப் பெற்றிருக்கலாம்.

'17,18ஆம் நூற்றாண்டுகளில் மேலைநாடுகளில் வளர்ந்து வந்த பெண்ணியம், இந்த இரண்டு நூற்றாண்டுகளில்தான் இந்தியச் சிந்தனை யிலும் ஒரு புதிய இடம்பெற்று வளர்ந்து வருகின்றது. இது பெண்களின் உரிமைக்காகப் போராடும் ஒரு புதிய இயக்கமாகும்"3 என்னும் கூற்று இதற்கு விளக்கம் தருகின்றது.

## பெண்ணியத்தின் நோக்கங்கள்

### பெண்ணியத்தின் நோக்கங்களாக:

1. 'பெண்கள் அடிமைப்படுத்துதல் கூடாது.
2. பெண்கள் தங்கள் திறமைகளை வெளிக்காட்டுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும்
3. பெண்களின் மனதிற்கும், உடலிற்கும், ஆண்கள் சொல்லாலும், செயலாலம் துன்பம் தரக்கூடாது.
4. பெண்கள் முன்னேறுவதற்குத் துணை புரிய வேண்டும்"[4]

இவையே பெண்ணியத்திற்குச் சிறந்த நோக்க ங்களாகும். மேலும் 'ஆண்வர்க்கத்திற்குப் பெண்கள் விடுதலை பெற வேண்டும் என்ற எண்ணம் இருப்பினும் சமுதாயம் பண்பாடு, குடும்பம் முதலிய காரணிகளால் நனவு மனத்தின் செயல்பாட்டினால் மறைக்கப் படும்"[5] என்பர் ப.மருதநாயகம்.

## பெண்ணியக் கோட்பாடு

மனித இனத்தின் சரிபாதியாக விளங்கும் பெண்ணின் வாழ்க்கையை அதன் உண்மை யான தளத்தில் நின்று சமுதாய அக்கறை யோடும் மனிதநேயத்தோடு அணுகுவது பெண்ணியம் எனலாம். உலகம் முழுவதிலு முள்ள பெண்கள் அனைவருக்கும் பொது வான பண்புகள் விடுதலை பற்றியது. இதனை 'பெண்ணியக் கோட்பாட்டிற்குப் பொதுவான ஒரு வரையறைகூற முடியாது. குடும்பத்தில் நிலவுகின்ற ஒடுக்குமுறைகள், சமுதாயத்தில் பெண்களுக்கு ஏற்பட்டுள்ள இழிவுகள் அவர்கள் வேலைசெய்யும் இடங் களில் காணப்படும் சுரண்டல்கள், தொல்லை கள் எடுக்கும் நடவடிக்கைகளே பெண்ணிய த்தின் நிலை"[6] என்று தி.வி சரோஜா குறிப்பிடுகின்றார். எனவே பெண்ணியமும் கோட்பாடுகளும் சமுதாய மாற்றத்திற்காக வும் பெண்கள் உரிமைக்காகவும் வகுக்கப் பட்டன எனலாம்.

## தமிழிலக்கியத்தில் பெண்ணியம்

மக்களின் வாழ்வியலை படம் பிடித்துக் காட்டும் தமிழ் இலக்கியங்கள் பல்வேறு தன்மையில் தன்னை பரிணமித்துக் கொண்டுள்ளது. அந்த வகையில் பெண் சார்ந்த சிந்தனைகள் கொண்ட இலக்கியங் களில் பெண்ணியம் குறித்த சிந்தனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. திருக்குறளிலும், காப்பிங்களிலும் கம்பராமாயணத்திலும், பெண்ணித்திற்கு முன்னுரிமை தரப் பட்டிருப்பதை அறியலாம்.

## தமிழன்பனின் பெண்ணியப்பார்வை

தமிழன்பன் தன் கவிதைப் படைப்புகளில் பெண்ணியத்தையும், பெண்ணின் பெருமை யினையும் பலவாறு பாடியுள்ளார். சமுதாய த்தில் பெண்களுக்கு இருக்கும் நிலையினைப் படம்பிடித்துக் காட்டுவதோடு மட்டுமல்லா மல் அவர்களது நிலையில் மாற்றம் அடைய வும், முன்னேற்றமடையவும், வலியுறுத்தும் விதத்தில் கவிதைகள் படைத்தியுள்ளார். தமிழன்பன் கவிதைகளில் காணப்பெறும் பெண்ணியப் பார்வையானது, மார்க்சியப் பெண்ணியம் என்னும் நிலையினிலும் அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது.

## உலகநோக்கு

கவிஞர் தமிழன்பனின் பெண்ணியப் பார்வையானது நாடு தழுவியோ, மொழி தழுவியோ, இனம் தழுவியோ அமைய வில்லை. இந்த எல்லைகளைத் தாண்டி அது உலகளாவிய நிலையில் அமைந்திருப்ப தனைக் காணமுடிகின்றது. இதனை,

'ஒரு மார்க்சியக் கவிஞன் தன் நாட்டிற் காகவும் பிறநாட்டிற்காகவும் குரல்

கொடுக்கும் விரிந்த பார்வை உடையவன். உலக மக்களை எல்லாம் ஒரு தாய் மக்களாகக் காணும் உயர்ந்த உள்ளம் படைத்தவன் இனம், மொழி, நாடு அவனுக்கு எல்லைகளல்ல. இதனைத்தும் கவிதையில் நிலைவேற்றிய பெருமை தமிழன்பனுக்கு உண்டு”[7] என்று கூறுகின்றார் தெ.வாசுகி

## குடும்பம்

தற்காலக் குடும்ப உறவுகள் பெரும்பாலும் பொருளாதாரத்தை முன்வைத்தே அமைந்திருப்பதனைக் காணமுடிகின்றது. இதனைத் தமிழன்பன் தன் கவிதைகளின் மூலம் தெளிவுபடுத்துகின்றார். குடும்பக் கட்டமைப்பிலும், அதற்கு வெளியிலும் பெண்களுக்கு நேரும் இன்னல்களைச் சிலப்பதிகாரக் கண்ணகி, மாதவி என்னும் இருவர் நிலையில் நின்று.

‘ஏன் நீ போனாய்?
இப்படி வினாவை
எழுப்பவில்லை-கண்ணகி
இங்கே ஏன் நீ வந்தாய்?
இவ்வினா
மாதவி தொடுக்கவில்லை.”[8]

என்றும்

‘இன்று
உங்கள் கணவன்
இப்படி
கோவல முகவுரை
தொடங்கும்போதே
நீங்கலும்…
காலில் இருப்பதைக்
கழற்றி…”[9]

என்றும் கூறுகின்றார்.

மார்க்சியப் பெண்ணியவாதிகள், பெண்கள் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துமாறு தூண்டினர். பெண்களைப் போகப் பொருளாகவும், பிள்ளைகளை உருவாக்கும் கருவிகளாகவும் கருதும் நிலை ஒழிய வேண்டும் என்றால், கருத்தடையே முதன்மையான வழி என்பதனைக் கண்டறிந்து, பெண்களே தங்கள் நிலையைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும் என்ற கோட்பாட்டை முன்வைத்தனர். இக்கொள்கையின் பின்னணிக் குரலாகத் தமிழ்பன் கவிதையாக்கம் அமைந்திருப்பதனைக் காணமுடிகின்றது.

‘டாட்டா வீட்டுக்
குழந்தைகளுக்குத்
தொட்டில் ஆகும்
அரசாங்கம்
ஏழையின்
கையில்
மலிவு விலையில்
நிரோத் தருகின்றது.”[10]

என்னும் கவிதையில் அரசு, ஏழை-பணக்காரர்களிடையே காட்டும் வித்தியாசத்தினையும் காட்டுகின்றார்.

## பொருளாதாரநிலை

ஆண், பெண் இருவருக்குமிடையிலான வேறுபாடுகள் நிகழுவதற்குக் காரணம் பெண்ணடிமையே ஆகும். ஆண், பெண் சமத்துவத்திற்குப் பெண்களின் பொருளாதார விடுதலை இன்றியமையாதது என்றும் மார்க்சியப் பெண்ணியவாதிகள் கருத்துரைக்கின்றனர். தமிழன்பனோ, பொருளாதார நிலை மறைக்கப்பட்டாலோ, மறுக்கப்பட்டாலோ குடும்பத்தில் சிக்கல் தோன்றும் என்பதை,

‘பயப்பட்டு வெட்கப்பட்டு ஈட்டுகின்ற
மனத்தளர்வைச் சொல்லாமல்
மறைத்துவிட்டால்
வரவு செலவுத் திட்டம் குழப்பம் ஆகும்.”[11]

என்று கூறுகின்றார்

## பெண் உரிமை

பெண்கள் பெறவேண்டிய உரிமைகள் குறித்துச் சமூக ஆர்வலர்கள் பலரும் பேசுகின்றனர். ஆண்கள், பெண்களுக்குத் தரவேண்டிய உரிமைகள் பற்றி பேசுகின்றனர். இப்படி, ஆண்களை நம்பி அழுது புலம்பித் தங்களுக்கான உரிமைகளை, தங்களுக்கான உலகத்தைப் பெண்கள் பெற முடியுமா? எனத் தமிழன்பன் சிந்தித்துப் பார்க்கின்றார். இதற்குப் புதிய மரபுகள் உருவாக்கிட வேண்டும் என்று விரும்புகின்றார். இதனை

'அழுத பிள்ளைக்குப்
பால்கிடைத்தது அந்தக் காலம்!
அடித்து பிள்ளைக்குப்
பால்கிடைப்பது இந்தக் காலம்!
கையில்
மரப்பாச்சி வைத்து
விளையாடும் பழைய
மரபை மாற்றுங்கள்
கத்தியோடும் விளையாடும்
புதிய மரபு
உதயமாகட்டும்"[12]

என்னும் கவிதையால் உணர்த்துகின்றார். இவ்வாறு பெண்சார்ந்த சிந்தனைகளும் பெண்ணின் முன்னேற்றத்திற்கும் உரிய பல வழிகளை தனது கவிரதயின் வாயிலாக வலியுறுத்தியுள்ளார்.

## முடிவுரை

பெண்ணியக் கோட்பாடுகள் வளர்ச்சி பெற்ற பின்னர், தமிழ் இலக்கியங்களில் பெண்ணியச் சிந்தனைகளின் செழிப்போடு மலரத் தொடங்கின. புத்திலக்கியங்களில் பெண்ணிய அணுகுமுறை தற்காலத்தில் நிலவி வருகின்றது தற்காலப் படைப்புகளில் பெண்ணியச்சிக்கல்களுக்குத் தீர்வுகாண முயலும் போக்கினையும் காணமுடிகின்றது.

பண்டைக்காலம் முதலாகவே ஆண்கள், பெண்களைப் போகப் பொருளாகவும், போதைப் பொருளாகவும் பயன்படுத்தி வருகின்றனர் என்று பெண்ணியத் திறனாய்வாளர்கள் கூறுகின்றனர்.

பெண்களுக்கு எந்தத்துறையிலும் பாதுகாப்பு இல்லை என்று சுட்டிக்காட்டுகின்றார். பெண்கள் இப்பொழுதுதான் உரிமைகளைப் பெற்று வருகின்றனர் என்பது ஏற்புடைத்தாகும். கற்பு என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவில் இருக்கவேண்டும். என்பது கவிஞரின் அவா.

கவிஞர் தமிழன்பன் பெண்ணிய நோக்கு என்பது உலகப் பெண்ணினத்திற்கான குரலாக அமைந்துள்ளதனை அறியமுடிகின்றது. பாகிஸ்தானிலும், வங்காளதேசத்திலும் பெண்கள் பாதிப்புக்குள்ளானதை எடுத்துரைக்கும் விதத்தில் கவிதைகளைப் படைத்துள்ளார்.

கவிஞர் தமிழன்பன் பெண்ணி நோக்க என்பது மார்க்சியப் பெண்ணிய நோக்காக அமைந்துள்ளது. திருமணம் என்பது பெண்களை அடிமைப்படுத்தும் சங்கிலிகளாக இருந்தல் கூடாது என்பதைக் கவிஞரின் பாடல்கள் உணர்த்துகின்றன.

வரதட்சனை என்னும் கொடுமையால் இன்றைய நாளில் திருமணங்கள் வியாபாரப் பொருளாகி வருவதைக் கண்டிக்கின்றார். வரதட்சணையே முதிர்கன்னிகள் உருவாவதற்குக் காரணம் என்றும் குறிப்பிடுகின்றார். வரதட்சனை என்றும் சமூகச் சுரண்டலுக்கான அடையாளம் என்று கூறுகின்றார்.

## சான்றென் விளக்கம்


1. சி. இ. மறைமலை, சமூகவியல் நோக்கில் புதுக்கவிதை, (ப.37)
2. க.த. திருநாவுக்கரசு, தமிழ்க்கவிதைகளில் பாரதியின் தாக்கம் (ப.18)
3. சு.சண்முகசுந்தரம், (தொ.ஆ) பெண்ணியமும் கலை இலக்கிய பிரதிகளும் (ப.11)
4. மேலது (ப.11)
5. ப.மருதநாயகம், பெண்ணியத்திறனாய்வுத் திசைகள் (ப.5)
6. தி.வி.சரோஜா, பெண்ணியமும் கதை இலக்கியப்பிரதிகளும் (ப.5)
7. தெ.வாசுகி, தமிழன்பன் கவிதைகளில் பெண்ணியம் (ப.71)
8. தமிழன்பன், அந்த நந்தனை எரிச்ச நெருப்பின் மிச்சம்(ப.62)
9. மேலது (ப.87)
10. தமிழன்பன், திரும்பி வந்த தேர்வலம் (ப.107)
11. தமிழன்பன், தமிழன்பன் கவிதைகள் (ப.118-119)
12. தமிழன்பன், அந்த நந்தனை எரிச்ச நெருப்பின் மிச்சம்; (ப.83)